வெப்பத் தாக்கத்தால் தொழிலாளர்களுக்கு ஏற்படும் பாதிப்பு - விரிவான காப்பீடுத் திட்டத்தினை முறைப்படுத்திடுக!

# பருவநிலை மாற்றத்தைக் குறைக்க பசுமை கட்டுமானத்தை ஊக்கப்படுத்திடுக!

## சர்வதேச தொழிலாளர்கள் நினைவு நாள் கருத்தரங்கில் கோரிக்கை!

சென்னை, ஏப். 20 -

பாதுகாப்பற்ற மற்றும் சுகாதாரமற்ற பணியின் காரணமாக ஆண்டு தோறும் உலக அளவில் லட்சக்கணக்கானத் தொழிலாளர்கள் மாண்டு போகின்றனர். கை, கால், கண்களை இழந்து ஊனமாகின்றனர். அவர்களை நம்பியுள்ள குடும்பம் அனாதையாக நிற்க வேண்டிய சூழல் ஏற்பட்டு விடுகிறது. இப்படிப்பட்ட நிலை மேலும் தொடரக்கூடாது என்பதற்காகத்தான் ஐக்கிய நாடுகள் மன்றம் ஏப்ரல் 28 ஆம் நாளை உலகத் தொழிலாளர்கள் நினைவு நாளாக அறிவித்திருக்கிறது. அந்த நாளில் உலகம் முழுவதும் உள்ள தொழிற் சங்கங்கள், தன்னார்வ அமைப்புகள் பேரணி, கருத்தரங்கு, கூட்டங்கள் மூலம் பாதிக்கப்பட்டவர்களை நினைவு கூர்ந்து, எதிர்காலத்தில் இப்படிப்பட்ட பாதிப்புகள் வராமல் தடுப்பதற்கு, குறிப்பாக பாதுகாப்பானப் பணியை உறுதிப்படுத்துவதற்கு உறுதிமொழி எடுக்கின்றனர்.




பாதுகாப்பில்லாத பணியிடம், சுகாதாரம் இல்லாத பணியிடம் என்ற பிரச்சினைகள் நீடித்த நிலையில் தற்போது பருவநிலை மாற்றம், அதனால் ஏற்படக்கூடிய வெப்பநிலை உயர்வு, கடும் மழை, வெள்ளம், மண் சரிவு போன்றவற்றால் நேரடியாக பாதிக்கக் கூடியவர்கள் வெட்டவெளியில் பணியாற்றக்கூடிய கட்டுமானத் தொழிலாளர்கள், விவசாயக் கூலிகள் போன்றவர்களே ஆவர். இன்றைக்கு பருவநிலை மாற்றம் என்பது உலகை மிரட்டி கொண்டிருக்கிறது. தற்போது தமிழ்நாட்டில் பல இடங்களில் 100ரூ டிகிரி தாண்டி வெப்பம் உச்ச நிலை அடைகிறது. இதனால் வெயிலில் நேரடியாக பணியாற்றக்கூடிய கட்டுமானத் தொழிலாளர்கள் இந்த வெப்பநிலை உயர்வால் நேரடியாக பாதிக்கின்றனர். வெப்ப பக்கவாதம், சிறுநீரக பாதிப்பு, இருதய பாதிப்பு, தலைசுற்றல், மயக்கம், தலைவலி போன்ற பல்வேறு பிரச்சினைகள் இதனால் தொழிலாளர்களுக்கு ஏற்படுகிறது. இதிலிருந்து தொழிலாளர்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் நமக்கு இருக்கிறது.

அந்த வகையில் 28.04.2026 இன்று விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி மற்றும் கட்டடத் தொழிலாளர்கள் மத்திய சங்கத்தின் சார்பில் கருத்தரங்கு மாநிலப் பொதுச் செயலாளர் என்.சுந்தரராஜ் தலைமையில் நடைபெற்றது. மாநிலத் துணைத் தலைவர் எஸ்.இந்துமதி வரவேற்று பேசினார். சென்னை மேற்கு மாவட்டத் தலைவர் ஆர்.கே.செல்வம், தென் சென்னை மாவட்டத் தலைவர் கே.பஞ்சாட்சரம், செங்கல்பட்டு வடக்கு மாவட்டத் தலைவர் எஸ்.குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தலைவர் பொன்குமார் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

கட்டுமானம் மற்றும் மனைத் தொழில் கூட்டமைப்பின் மாநிலப் பொருளாளர் எஸ்.ஜெகதீசசன, ரியல் எஸ்டேட் தொழில் செய்வோர் நலச் சங்கத்தின் மாநிலச் செயலாளர் எஸ்.எம்.குமார், மெட்ரோபாலிட்டன் சிவில் இன்ஜினியர்ஸ் ஆசோசியன் தலைவர் எஸ்.கார்த்திகேயன், மாநில துணைத் தலைவர் பி.கே.மூர்த்தி, தலைமை நிலையச் செயலாளர் து.ரஜினிராஜ், மாநில இணைச் செயலாளர்கள் ஜி.புருஷோத்தமன், ஏ.ஜெ.நாகராஜ், மாநில மகளிரணிச் செயலாளர் இ.மணிமேகலை, பொருளாளர் பு.வரலெட்சுமி, துணைத் தலைவர் எம்.செல்வமலர் ஆகியோர் உரையாற்றினர். இக்கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

**தமிழ்நாடு அரசுக்குப் பாராட்டு!**

தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெயிலின் தாக்கத்திலிருந்து தொழிலாளர்களைப் பாதுகாக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார். குறிப்பாக பணி நேரத்தை காலை 11 மணிக்கு மேல் பிற்பகல் 3 மணிக்குள் வேலை செய்யக்கூடாது என்றும், வெப்ப உயர்வால் பாதிக்கப்பட்டு இறந்துப்போகும் தொழிலாளர்களுக்கு இயற்கை பேரிடர் நிவாரண நிதியில் இருந்து ரூபாய் 4 லட்சம் வழங்குவதற்கும் உத்தரவிட்டு, எல்லாவற்றிலும் முதன்மை நிலையை வகிப்பது போன்று இதிலும் மு.க. ஸ்டாலின் அரசு முன்னிலை வைக்கிறது. அதே போன்று இந்த பருவநிலை மாற்றத்தை குறைப்பதற்கு அரசு நீண்ட கால திட்டங்களை கொண்டு வந்து அதனை நடைமுறைப்படுத்தி வருவது பாராட்டுதலுக்குரியதாகும்.

வெப்ப அலை தாக்கத்தால் ஏற்படும் வெப்ப பக்கவாதம் உள்ளிட்ட நோய்களுக்காக தமிழ்நாடு அரசு மருத்துவமனைகளில் தேவையான மருந்து மற்றும் உபகரணங்களுடன் சிறப்பு வார்டுகள் ஏற்படுத்தப்பட்டு இருப்பது மிகுந்த பாராட்டுதலுக்குரியதாகும்.

**விரிவான காப்பீடு வேண்டும்!**

தொழிலாளர்கள் வேலை செய்ய முடியாத அளவிற்கு ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் வெயிலும், மழையும் இருந்தால் அந்த காலத்தில் ஊதிய இழப்பீடு வழங்கும் வகையிலும், இந்த வெயில் மற்றும் மழை, வெள்ளம் காரணமாக உயிரிழப்பு ஏற்பட்டால் பெரிய அளவில் இழப்பீடு வழங்கும் வகையிலும், பெரும் வெள்ளம், மண் சரிவு போன்ற காலங்களில் தொழிலாளர்களின் வீடுகள் உள்ளிட்ட உடைமைகள் பாதிக்கப்படும் போது அதற்கு உரிய இழப்பீடுகள் கிடைக்கும் வகையிலும் ஒரு விரிவான காப்பீடுத் திட்டத்தை அரசு நடைமுறைப்படுத்திட வேண்டுமென இந்த கூட்டத்தின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

**பசுமை கட்டுமானத்தை ஊக்கப்படுத்திடுக!**

பருவநிலை மாற்றத்திற்கு கட்டுமானத் துறை பெரும் பங்களிப்பை அளிக்கிறது. எனவே பருவநிலை மாற்றத்தை குறைப்பதற்கு ஏற்ப பசுமை கட்டுமானத்தை அரசு ஊக்கப்படுத்திட வேண்டும். கூடுதல் கட்டுமானப் பரப்பளவு வழங்கல், வரைபட அனுமதி கட்டணத்தில் சலுகை, வரி சலுகை போன்றவற்றை வழங்கி பசுமை கட்டுமானத்தை ஊக்கப்படுத்திட தமிழ்நாடு அரசை கேட்டுக் கொள்கிறோம் என்று கருத்தரங்கில் உரையாற்றியவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

---

# வாழும் பாரம்பரியம்: 2026 கண்ணபுரம் கால்நடை கண்காட்சி!

## கார்த்திகேய சிவசேனாபதி அறிக்கை!

கோவை, ஏப். 30-

2026 கண்ணபுரம் கால்நடை கண்காட்சியை ஆவணப்படுத்துவதில் சேனாபதி காங்கயம் கால்நடை ஆராய்ச்சி அறக்கட்டளையின் (SKCRF) மரபு குறித்து, கழக சுற்றுச்சூழல் அணிச் செயலாளரும், அயலகத் தமிழர் நல வாரியத் தலைவருமான கார்த்திகேய சிவசேனாபதி பெருமிதத்துடன் தெரிவித்துள்ளார்.

திருப்பூர் மாவட்டத்தில் நடைபெறும் கண்ணபுரம் கால்நடைக் கண்காட்சி, இந்தியாவின் மிக முக்கியமான கால்நடைப் பாரம்பரியங்களில் ஒன்றாகும். 1,000 ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றைக் கொண்ட இந்த வருடாந்திரச் சந்தை, தமிழ் நிலத்தின் பண்டைய ஆயர் மரபுகளின் முக்கியச் சங்கிலியாகத் திகழ்கிறது. சர்வதேச மேய்ச்சல் நிலங்கள் மற்றும் மேய்ப்பர்கள் ஆண்டை (IYRP) 2026இல் உலகம் அனுசரிக்கும் வேளையில், இந்தப் பாரம்பரியத்தின் ஆழமான வேர்களை நாங்கள் அங்கீகரிக்கிறோம். "பதிற்றுப் பத்து" மற்றும் "தொல்காப்பியம்" போன்ற பண்டைய சங்க இலக்கியங்கள், கொங்கு நிலக் கால்நடைகளை கி.மு. 300க்கு முன்பே ஆவணப் படுத்தியுள்ளன. இது மக்களுக்கும், உன்னதமான காங்கயம் இனத்திற்கும் இடையே உள்ள 3,000 ஆண்டுகள் பழமையான பிணைப்பை விளக்குகிறது.

SKCRFஇன் பணிகள் (2009 முதல் தற்போது வரை): இந்தக் கண்காட்சி மிகத் தொன்மையானது என்றாலும், அதன் கலாச்சார மற்றும் மரபியல் முக்கியத்துவத்தை ஆவணப்படுத்தவும் பாதுகாக்கவும் நவீன முயற்சிகளை சேனாபதி காங்கயம் கால்நடை ஆராய்ச்சி அறக்கட்டளை (SKCRF) முன்னெடுத்துள்ளது.

**2009 முதல் SKCRF அயராது ஆற்றி வரும் பணிகள்:**

- உயிரியல் கலாச்சார ஆவணமாக்கம்: கால்நடை பராமரிப்பாளர்களின் மரபு சார் வாழ்வியல் முறைகளை ஆவணப்படுத்துதல்.
- இன்சிட்டு (Insitu) பாதுகாப்பு: காங்கயம் இனத்தை அதன் இயல்புச் சூழலிலேயே பாதுகாப்பதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- அறிவியல் மற்றும் பாரம்பரிய இணைப்பு: இந்தியப் புல்வெளிகளின் 35,000 ஆண்டுகள் பழமையான பாரம்பரியத்தைப் பாதுகாக்க சர்வதேச நிறுவனங்களுடன் இணைந்து, பாரம்பரிய அறிவிற்கும் நவீன அறிவியலுக்கும் இடையிலான இடைவெளியைக் குறைத்தல்.

**தொடரும் மரபு:**

இன்று சத்தியமங்கலத்தில் உள்ள காங்கயம் கால்நடை ஆராய்ச்சி நிலையம் (KCRS), பாரம்பரியமும் தொழில்நுட்பமும் சங்கமிக்கும் ஒரு கலங்கரை விளக்கமாகத் திகழ்கிறது. இங்கு வளர்க்கப்படும் ஒவ்வொரு கன்றும், கொங்கு நாட்டு மக்களின் செல்வம் மற்றும் கலாச்சாரப் பெருமையின் அடையாளமாக விளங்குகிறது.

2026 கண்ணபுரம் கால்நடை கண்காட்சி ஏப்ரல் 30, 2026 வரை நடைபெறுகிறது. விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் இதில் பங்கேற்று, காங்கயம் இனத்தைப் பாதுகாப்பதோடு, தமிழகத்தின் ஆயர் பாரம்பரியத்தைக் கொண்டாடவும் இது ஒரு சிறந்த வாய்ப்பாகும்.

இவ்வாறு கழக சுற்றுச் சூழல் அணிச் செயலாளரும், அயலகத் தமிழர் நல வாரியத் தலைவருமான கார்த்திகேய சிவசேனாபதி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

# சித்ரா பவுர்ணமியை முன்னிட்டு திருவண்ணாமலைக்கு 11,823 சிறப்பு பேருந்துகள்!

## போக்குவரத்துத் துறை மேலாண் இயக்குநர் தகவல்!

சென்னை, ஏப். 30-

சித்ரா பவுர்ணமியை முன்னிட்டு திருவண்ணாமலைக்கு இன்று முதல் 2ம் தேதி வரை 11823 பேருந்துகள் தினசரி இயக்கக் கூடிய பேருந்துகளுடன் கூடுதலாக இயக்கப்படும் என்று அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: இன்று (30.04.2026) இரவு 9.50 மணி முதல் 1ம் தேதி இரவு 11.07 மணி வரை (வெள்ளி கிழமை) சித்ரா பவுர்ணமியை முன்னிட்டு திருவண்ணாமலைக்கு 2ம் தேதி வரை சென்னையிலிருந்து திருவண்ணாமலைக்கும் மற்றும் பல்வேறு இடங்களிலிருந்து திருவண்ணாமலைக்கும் கூடுதலான பயணிகள் பயணம் மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் தினசரி இயக்கப்படும் பேருந்துகளுடன் கூடுதலாக சிறப்பு பேருந்துகளை இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் சென்னை கிளாம்பாக்கத்திலிருந்து இன்று 548 பேருந்துகளும், 1ம் தேதி 565 பேருந்துகளும் மற்றும் 2ம் தேதி 35 பேருந்துகளும் சென்னை மாதவரத்திலிருந்து இன்று 186 பேருந்துகளும் 1ம் தேதி 174 பேருந்துகளும் மற்றும் சென்னை அடையாறிலிருந்து இன்று 55 பேருந்துகளும் 1ம் தேதி 50 பேருந்துகளும் தினசரி இயக்கக் கூடிய பேருந்துகளுடன் கூடுதலாக இயக்கப்படும் மற்றும் சென்னை கோயம்பேட்டிலிருந்தும் இயக்கப்படும்.

ஆக, சென்னை மற்றும் பல்வேறு இடங்களிலிருந்து திருவண்ணாமலைக்கு இன்று முதல் 2ம் தேதி வரை 11823 பேருந்துகள் தினசரி இயக்கக் கூடிய பேருந்துகளுடன் கூடுதலாக இயக்கப்படும். அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மூலமாக இருக்கை மற்றும் படுக்கை வசதி கொண்ட குளிர்சாதனம் கொண்ட 40 பேருந்துகள் சென்னை கிளாம்பாக்கத்திலிருந்து திருவண்ணா மலைக்கு 1ம் தேதி இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், மதுரை, சேலம், கோயம்புத்தூர், திருநெல்வேலி, நாகர்கோவில், தென்காசி, தூத்துக்குடி மற்றும் பெங்களூரு ஆகிய இடங்களிலிருந்து திருவண்ணாமலைக்கு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக பேருந்துகள் இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், முன்பதிவு செய்து பயணிக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. பயணிகள் கூட்ட நெரிசலை தவிர்க்கும் பொருட்டு தங்களது பயணத்திற்கு www.tnstc.in மற்றும் மொபைல் ஆப் மூலம் முன்பதிவு செய்து பயணிக்கலாம்.

இச்சிறப்பு பேருந்து இயக்கத்தை கண்காணிக்க அனைத்து பேருந்து நிலையங்களிலும் போதிய அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். எனவே, பயணிகள் மேற்கூறிய வசதியை பயன்படுத்தி தங்களது பயணத்தை மேற்கொள்ளலாம். இவ்வாறு போக்குவரத்துத் துறை மேலாண் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

---

# எம் இனத்தை விழிப்பூட்டிய ஒப்பில்லா புரட்சிக் கவிஞன்!



புரட்சியை
கொப்பளித்த

எங்கள்
உணர்ச்சிக்
கவிஞன்..

"கொலை வாளினை
எடடா

கொடியோர்
செயல்
அறவே

குகைவாழ்
ஒரு புலியே

உயர் குணம்
மேவிய
தமிழா...

இப்படி

எரிமலைத்
தமிழால்

இன மானம்
எழுப்பவே

கனமான
தமிழ் கொண்டு
கவிபாடிட

புதுவையில்
இருந்து
புறப்பட்ட

புரட்சிக் கவிஞன்...

உலகாளும்
தமிழின்
அவதாரப்
பிள்ளையாகி

உரக்கக்
கூவிய
உணர்ச்சிக்
கவிஞன்..

"தமிழால்
பாரதி
தகுதி பெற்றதும்

தமிழ் பாரதியால்
தகுதி பெற்றது என

முண்டாசு
கவியின்
முத்தமிழ்
தொண்டுக்கு

முதன்மைச்
சீடனாகி

சுப்புரத்தினம்
எனும்
பெற்றோர்
சூட்டிய தன் பெயரை..

பாரதிதாசன்
என

பதமாற்றம்
செய்து கொண்ட
பாசக்கவிஞன்

மங்காப்
புகழ் தமிழாலே

மாஞ்சோலை
குயிலாக
கூவியவன்..

மாணாக்கர்க்கு
மாசற்ற தமிழை
போதிக்கும்
ஆசிரியனாய்

அறப்பணியை
ஆண்டு பல
ஆற்றியவன்..

கிறுக்கன்
கிண்டல்
காரன்
என்றெல்லாம்

புனைப்
பெயர்களில்
எழுதியே

புரட்சிகள்
படைத்தவன்

புதுச்சேரி
அரசியலில்

புயலாக
அடித்தவன்..

சட்ட மன்ற
உறுப்பினராக
ஜெயித்தவன்

சாகித்திய அகாதமி
விருது கொய்து
ஜொலித்தவன்..

தமிழுக்கு
அமுதென்று
பேர்..

அந்த தமிழின்பத்
தமிழ் எங்கள்

உயிருக்கு நேர்..என்று

தீராநதி
தமிழாலே

தித்திப்பு
கூட்டியவன்..

பொங்கு தமிழர்க்கு
இன்னல்
என்றால்

சம்ஹாரம்
நிஜமென்று

சங்காக
முழங்கியவன்

ஏழ்மை
சாதிப்பகை
எனும் தீமையை
ஒழித்து

எங்கும்
சமத்துவம்
செழிக்க

எதுகை மோனைத்
தமிழாலே

புதியதோர் உலகம்
செய்ய

புறப்பட்ட
புரட்சிக் கவிஞன்..

அவன் தான்

எழுத்திலே
கொளுத்தும்
நெருப்பால்

எம் இனத்தை
விழிப்பூட்டிய

ஒப்பில்லா
உணர்ச்சிக்
கவிஞன்.



**மருது அழகுராஜ்**
*கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்*

---




பி.எஸ்.அப்துல்ரஹ்மான் கிரசண்ட் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவன தமிழ்த்துறையும் கவிஞர் ஆலந்தூர் மோகன ரங்கன் தமிழியல் ஆய்வு மையம் மற்றும் ரசியா தமிழ்ச்சங்கம் இணைந்து நடத்திய 'நவீன இலக்கியங்கள் பன்னாட்டுப் பார்வை' எனும் கருத்தரங்கம் நேற்று முன்தினம் (28.4.2026) நடைபெற்றது. தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் ராதிகா மேகநாதன் வரவேற்புரையில் துணைவேந்தர் முனைவர் ஏ.பீர் முகமது தலைமையுரையில், நா.ராஜா உசேன் முன்னிலையில், பேரா.கான்ஸ்டன்டைன் ரவிந்திரன் எம்.பி., மேனாள் நீதியரசர் அக்பர் அலி சிறப்புரை ஆற்றினர். இதில் இணை துணைவேந்தர் என்.தாஜீதீன், ஈராக் தமிழ்ச் சங்கத் தலைவர் சாதிக் பாஷா, முனைவர் அயூப்கான் வாழ்த்துரை வழங்கினர். மோ.பாட்டழகன் நன்றி கூறினார்.